**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 09.06.2025**

**O.S. 196/2011**

**வா.சா. 1 – முத்தம்மாள்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கிற்காக 2014 ம் வருடம் சத்தியப்பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து முதல் விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்பு நான் இந்த வழக்கை தொடந்து நடத்தவில்லை என்றால் சரிதான். அதனால் எனது தவறுதலின் பேரில் இந்த வழக்கு ex-parte செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது மனுவின் பேரில் வழக்கினை திரும்ப பெற்று நடத்துகிறேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு பட்டிகை சொத்து பிரதிவாதியிடம் இருந்து எனக்கு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார்கள் அதனை படித்து விபரம் கேட்டுக் கொண்டேன் என்றால் சரிதான்.

அதில் பிரதிவாதிகள் என்ன தர்க்கம் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் வழக்கு பட்டிகை சொத்து பிரதிவாதிக்கு வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். 1741/2004 ம் வருடம் வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதியின் உரிமையையோ, உடமையையோ கட்டுப்படுத்தாது அது மோசடியின் பெயில் ஆனது என்று பிரதிவாதகிள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**